செ.வே.எண்: 194 நாள்: 27.03.2021

# பத்திரிக்கைசெய்தி

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 06.04.2021 அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்கள் தங்களது வாக்குகளை உரிய வாக்குமையத்தில் பதிவுசெய்ய ஏதுவாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம், பொதுமக்கள் எளிதாக எவ்வித இடையூறுமின்றி, பயணம் செய்ய ஏதுவாக சென்னையிலிருந்து கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை பேராவூரணி, மன்னார்குடி, நன்னிலம், நாகப்பட்டினம், காரைக்கால் வேளாங்கண்ணி, மயிலாடுதுறை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், திருச்சி, அரியலூர், ஜெயங்கொண்டம், கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம், மதுரை ஆகிய இடங்களுக்கு 04.04.2021, 05.04.2021 ஆகிய நாட்களிலும் இயக்கப்பட உள்ளது.

திருச்சியிலிருந்து தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மதுரை ஆகிய இடங்களுக்கு மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர் ஊர்களிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய ஊர்களுக்கும் மற்றும் கும்பகோணம் போக்குவரத்து கழக இயக்க பகுதிக்கு உட்பட்ட அனைத்து முக்கிய நகரங்களுக்கு 01.04.2021 முதல் 08.04.2021 வரை, அனைத்து முக்கிய நகரங்களிலிருந்து பயணிகள் பயன்பாட்டிற்கு ஏற்ப பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, எங்களின் சேவையை முழுமையாக பயன்படுத்தி கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 04.04.2021 முதல் 05.04.2021 வரை சென்னையிலிருந்து பொதுமக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில், தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, மன்னார்குடி, நன்னிலம் மற்றும் திருவையாறு செல்லும் பேருந்துகள் தாம்பரம் சானிடோரியம் (MEPZ ) அறிஞர் அண்ணா

பேருந்து நிலையத்திலிருந்தும். கரூர், திருச்சி, அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம், புதுக்கோட்டை அறந்தாங்கி, ராமநாதபுரம், ராமேஸ்வரம், பரமக்குடி, மதுரை, கமுதி, முதுகுளத்தூர், நாகப்பட்டிணம், வேளாங்கண்ணி, மயிலாடுதுறை, சீர்காழி, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் தட பேருந்துகள் கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிந்து திரும்ப அவரவர் ஊர்களுக்கு செல்ல 06.04.2021, 07.04.2021, 08.04.2021 ஆகிய நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் லிட், மேலாண் இயக்குனர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---